# கார்ல்மார்க்ஸ் சிலை: முதல்வர் திறந்து வைத்தார்!

முதல் பக்கத் தொடர்ச்சி

முதலமைச்சர் அவர்கள் கடந்த 3.4.2025 அன்று சட்டப்பேரவையில், சட்டமன்றப் பேரவை விதி எண்.110ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், ”உலகத் தொழிலாளர்களே ஒன்று கூடுங்கள் என்ற பிரகடனத்தை, உலகத் தொழி லாளர்கள் அனைவருக்குமான ஒரே முழக்கமாக பொதுவுடைமைத் தத்துவத்தை வடித்துத் தந்தவர், இழப்பதற்கென்று எதுவுமில்லை பெறுவதற்கோ பொன்னுலகு இருக்கிறது என்ற நம்பிக்கை விதைகளை விதைத்தவர் மாமேதை கார்ல் மார்க்ஸ் அவர்கள். வரலாற்றில் பலரும் பிறக்கிறார்கள்; பலர் வரலாற்றுக்குத் தொண்டாற்றி இருக்கிறார்கள். ஆனால், வரலாற்றின் போக்கினையே மாற்றி அமைத்தவர்கள் சிலர் தான். அந்த ஒரு சிலரில் தலைமகனாகப் போற்றப்படுபவர் கார்ல் மார்க்ஸ் அவர்கள். அத்தகைய மாமேதை கார்ல் மார்க்ஸ் அவர்களது உருவச் சிலை தமிழ்நாட்டின் தலைநகரான சென்னை மாநகரில் அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

### கார்ல் மார்க்ஸ் புகைப்படக் கண்காட்சி! முதல்வர் பார்வையிட்டார்!

அந்த அறிவிப்பின்படி, சென்னை, எழும்பூர் அருங்காட்சியக வளாகம், கன்னிமாரா பொது நூலகத்தின் வாயிலில் 85 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள மாமேதை கார்ல் மார்க்ஸ் அவர்களின் திருவுருவச் சிலையை முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்து, அச்சிலை அருகில் வைக்கப்பட்டிருந்த அவரது திருவுரு வப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். முன்னதாக, மாமேதை கார்ல் மார்க்ஸ் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கும் வகையில் அங்கு அமைக்கப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியையும் பார்வையிட்டார்.

எழுத்தாளரும், மார்க்சிய சிந்தனை யாளருமான பேராசிரியர் அ.மார்க்ஸ் அவர்கள் மாமேதை கார்ல் மார்க்ஸ் அவர்களுக்கு சென்னையில் சிலை அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து எழுதிய கடிதத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் அவர்கள் முதலமைச்சர் அவர்களிடம் வழங்கியதன் அடிப்படையில் அவரது திருவுருவச்சிலை சென்னை, எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் நிறுவப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### பங்கேற்றுச் சிறப்பித்தோர்!

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, கே.சுப்பராயன், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் வைகோ, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன்,

தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு.செல்வப்பெருந்தகை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செய லாளர் மு.வீரபாண்டியன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், முன்னாள் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ. பரந்தாமன், நாகை மாலி, பிரபாகரராஜா, மு. பாபு, முகமது ஷா நவாஸ், துணை மேயர் மு. மகேஷ்குமார், இந்து குழும இயக்குநர் என். ராம், கம்யூனிஸ்ட் கட்சிகளின் நிர்வாகிகள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் கிரிக்கெட்

# உலகக் கோப்பையை வென்ற இந்திய அணிக்குப் பாராட்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்!

சென்னை, பிப். 8-

19 வயதுக்குட்பட்டோருக்கான ஐ.சி.சி. ஆடவர் கிரிக்கெட் உலகக் கோப்பையை வென்றுள்ள இந்திய அணிக்குப் பாராட்டு தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு :-

**19 வயதுக்குட்பட்டோருக்கான ஐ.சி.சி. ஆடவர் கிரிக்கெட் உலகக் கோப்பையை வென்றுள்ள இந்திய அணிக்குப் பாராட்டுகள். திறமையும் முதிர்ச்சியும் ஒருங்கிணைந்த வெற்றியால் நாட்டுக்கு மற்றுமொரு பெருமிதத் தருணத்தை வழங்கியுள்ளனர்.**

**இறுதிப் போட்டியிலும், இந்தத் தொடர் முழுவதும் வைபவ் சூர்யவம்சி வெளிப்படுத்திய அபாரமான ஆட்டம் இன்னும் பல ஆண்டுகளுக்கு நினைவுகூரப்படும்.**

**அடுத்து இந்திய ஆடவர் அணிக்காக உலக அரங்கில் ஆடவுள்ள இந்த இளம் பட்டாளத்தின் நம்பிக்கை மேலும் பல வெற்றிகளாக மாறிட வாழ்த்துகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

## தமிழ்நாடு என்ற வார்த்தைகூட இல்லாத நிலையில் ஒன்றிய பட்ஜெட்டை பாராட்டுகிறார்!

# பா.ஜ.க.வின் முரட்டு அடிமை எடப்பாடி பழனிசாமி!

## தஞ்சையில் எஸ்,எஸ், பழனிமாணிக்கம் இல்லத்திருமண விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!


தஞ்சாவூர், பிப்.8-

**தஞ்சாவூர் மஹாராஜா மஹாலில், முன்னாள் ஒன்றிய அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழனி மாணிக்கம் அவர்களின் சகோதரர் எஸ்.எஸ். ராஜகுமாரன் அவர்களின் மகள் ஐஸ்வர்யா - மருத்துவர் வெங்கடேஷ் ஆகியோரின் திருமணத்தை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் நடத்தி வைத்து வாழ்த்திப் பேசினார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரையின் விவரம் வருமாறு:

முன்னாள் ஒன்றிய அமைச்சர், கழகத்தின் உயர்நிலைச் செயல்திட்டக் குழு உறுப்பினர் அண்ணன் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் அவர்களின் சகோதரர் ராஜகுமாரன் - ஷர்மிளா அவர்களின் அன்பு மகள் ஐஸ்வர்யா, கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மூத்த தலைவர் மறைந்த வெங்கடாசலம் அவர்களின் பேரனும், சுகுமாரன் - இந்திரா இணையரின் மகனுமான தம்பி வெங்கடேஷ், இவர்களது திருமணத்தை, உங்களுடைய முன்னிலையில் நடத்தி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.





தஞ்சாவூர் மாவட்டம், எப்படி திராவிட இயக்கத்திற்குச் செல்வாக்கான ஒரு மாவட்டமோ, அதேபோல கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கும் செல்வாக்கான மாவட்டம்தான் இந்த தஞ்சாவூர் மாவட்டம். அப்படிப்பட்ட திராவிட இயக்கக் குடும்பமும் கம்யூனிஸ்ட் இயக்கக் குடும்பமும் இணைகின்ற விழாவாக, ஒரு சிறப்பான நிகழ்ச்சியாக இந்தத் திருமணம் இங்கே நடைபெற்றிருக்கின்றது.

### நான் ஒரு டெல்டாக்காரன்

தஞ்சாவூருக்கும் கலைஞர் அவர்களுக்கும், நம்முடைய கழகத் தலைவர் அவர்களுக்கும், எனக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு உண்டு. ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் பிறந்தவர்தான் டாக்டர் கலைஞர் அவர்கள். அதுமட்டுமல்ல, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1962-இல் நின்று வென்ற தொகுதி, இந்தத் தஞ்சாவூர் தொகுதி. நம்முடைய முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் எப்பொழுதுமே பெருமையோடு சொல்வதுண்டு, ``நான் ஒரு டெல்டாக்காரன்” என்று தலைவர் அவர்கள் எப்பொழுதும் பெருமையாகச் சொல்வார்கள், உரிமையோடு சொல்வார்கள். அந்த உரிமையோடுதான், `என்னுடைய வேர்கள் இருக்கிற இடமும் இந்த ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டம்’ என்ற அந்த உரிமையோடு, இன்றைக்கு இந்தத் திருமண விழாவில் நான் பங்கேற்கின்றேன்.

அண்ணன் பழனிமாணிக்கத்தைப் பற்றி, இங்கே உங்களுக்கு நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை. தன்னுடைய 12-வது வயதில் கழகப் பணியில் ஈடுபட்டவர் அண்ணன் பழனிமாணிக்கம் அவர்கள். 1962-ஆம் ஆண்டு தேர்தலில் தஞ்சாவூர் தொகுதியில் கலைஞர் நின்றபோது, உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்கக் கோரி கலைஞருக்காக இங்கே இருக்கக்கூடிய ஒவ்வொரு வீட்டிற்கும் ஏறி இறங்கி வாக்குச் சேகரித்தவர் அண்ணன் பழனிமாணிக்கம் அவர்கள்.

### கழக மாணவர் அணி

தன்னுடைய 12 வயதில் ஆரம்பித்து, கிட்டத்தட்ட 64 ஆண்டுகளாக இன்றைக்கு அண்ணன் அவர்கள் பொது வாழ்க்கையில் ஈடுபட்டு வருகிறார். மாணவராக இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் கலந்துகொண்டிருக்கிறார். அதன் பிறகு கல்லூரியில் படிக்கும் பொழுது கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டதனால், கல்லூரியிலிருந்து பலமுறை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். தான் படித்த எல்லா கல்லூரிகளிலும் கழகத்தின் மாணவர் அணி அமைப்பைத் தொடங்கி, அதைச் சிறப்பாக நடத்தியவர்தான் அண்ணன் பழனிமாணிக்கம் அவர்கள்.

சட்டம் படித்துவிட்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராக அவர் பயிற்சி செய்யும்போது டாக்டர் கலைஞர் அவர்களிடத்தில், வாழ்த்து பெறுவதற்காகச் சென்றிருக்கிறார். அப்போது கலைஞர் அவர்கள், ``நீ தஞ்சாவூருக்குச் சென்று பயிற்சி செய், அப்படியே தஞ்சாவூரில் கழகப் பணியில் நீ ஈடுபட வேண்டும், கட்சியை வளர்க்க வேண்டும்” என்று கழகப் பணிகளைச் செய்வதற்காக கலைஞர் அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டவர்தான் அண்ணன் பழனிமாணிக்கம் அவர்கள். அதன் பிறகு, கழகத்தில் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றி, இன்றைக்கு உயர்நிலைச் செயல்திட்டக் குழு உறுப்பினராகப் பணியாற்றி வருகிறார். தான் ஏற்ற பொறுப்புகள் அனைத்திலும் சிறப்பாகப் பணியாற்றியவர் அண்ணன் பழனிமாணிக்கம் அவர்கள்.

இதே தஞ்சை மக்களவைத் தொகுதியிலிருந்து, ஆறு முறை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர். அந்த அளவுக்கு இந்தப் பகுதி மக்களின் அன்பையும், நம்பிக்கையையும், செல்வாக்கையும் பெற்றவர் அண்ணன் பழனிமாணிக்கம் அவர்கள்.

### இல்லத் திருமண விழா

ஒன்றிய இணையமைச்சராக ஒன்பது ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றியவர். தான் கொண்ட கொள்கையில் தடம் மாறாமல், உறுதியோடு பயணிக்கின்ற அண்ணன் பழனிமாணிக்கம் அவர்களின் இல்லத் திருமண விழாவில் உங்களோடு சேர்ந்து நான் பங்கேற்றுத் திருமணத்தை நடத்தி வைப்பது எனக்குக் கூடுதல் பெருமை, கூடுதல் மகிழ்ச்சி.

இந்த அரங்கத்தின் பெயர் மகாராஜா அரங்கம். ஆனால், மகாராஜாக்களுக்கு இணையாக மகாராணிகள் நிறைய பேர் வந்திருக்கிறீர்கள். இன்றைக்கு நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மகளிருக்கான திட்டங்கள் ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்துச் செய்து வருகிறார். முதலமைச்சராகப் பொறுப்பேற்று அவர் இட்ட முதல் கையெழுத்து மகளிருக்கான கையெழுத்து; மகளிருக்கான விடியல் பயணத் திட்டம்.

### காலை உணவுத் திட்டம்

தாய்மார்கள் காலையில் எழுந்து பள்ளிக்கூடத்துக்குக் குழந்தைகளை அனுப்புவதற்குச் சிரமப்பட்ட பொழுது முதலமைச்சர் அறிவித்த திட்டம்தான் முதலமைச்சர் காலை உணவுத் திட்டம். பெண்கள் படிக்க வேண்டும், பள்ளிப் படிப்பு படித்தால் போதாது, உயர்கல்வி படிக்க வேண்டும் என்று அரசுப் பள்ளியில் படித்து எந்தக் கல்லூரியில் உயர்கல்வி சேர்ந்தாலும், உங்களுக்கு 1,000 ரூபாய் ‘புதுமைப்பெண்’ திட்டத்தின் மூலம் கொடுத்தவர்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

இதற்கெல்லாம் மகுடம் சூட்டுவது போல இன்றைக்கு ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 30 லட்சம் மகளிருக்குக் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையையும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார்கள். இப்படிப் பல்வேறு சிறப்பான திட்டங்களைச் செய்து வருவதால்தான், இன்றைக்கு நம் தமிழ்நாடு இந்தியாவிலேயே வளர்கின்ற மாநிலங்களில் 11.19 விழுக்காடு வளர்ச்சியோடு முதல் மாநிலமாகத் தமிழ்நாடு விளங்கி வருகிறது.

இவற்றையெல்லாம் பொறுக்க முடியாத ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசு இன்றைக்குப் பல்வேறு வகையில், நம்முடைய தமிழ்நாட்டிற்கு, நம்முடைய அரசிற்குத் தொல்லைகளைக் கொடுத்து வருகின்றது. நிதி உரிமையைப் பறிக்கிறார்கள், மொழி உரிமையைப் பறிக்கிறார்கள். மீண்டும் புதிய கல்விக் கொள்கையைக் கொண்டு வந்து இந்தியையும், சமஸ்கிருதத்தையும் நம்முடைய தமிழ்நாட்டு மாணவர்கள் மீது திணிக்கப் பார்க்கிறார்கள். தமிழ்நாட்டிற்கான நிதி உரிமை தொடர்ந்து பறிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டு நாட்களுக்கு முன்பு அறிவித்த ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு என்று ஒரு திட்டமும் இல்லை. அண்ணன் பழனிமாணிக்கம் அவர்கள் ஒன்றிய நிதித் துறை இணை அமைச்சராக பணியாற்றியவர்; தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகப் பல திட்டங்களைக் கொண்டு வந்தவர். ஆனால் இப்போது நிதியமைச்சராக மரியாதைக்குரிய நிர்மலா சீதாராமன் அவர்கள் இருக்கிறார்கள். `நான் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்’என்று பெருமையாகச் சொல்லிக் கொள்வார். ஆனால், தமிழ்நாட்டிற்கு என்று ஒரு திட்டம்கூட கடந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்படவில்லை. `தமிழ்நாடு’ என்ற வார்த்தையே சென்ற வார பட்ஜெட்டில் கிடையாது.

### முரட்டு அடிமைகள்

இப்படி ஒன்றிய அரசு தமிழ்நாட்டைப் பல வழிகளில் வஞ்சித்து வருகிறது. இதையெல்லாம் கண்டிக்க வேண்டிய எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி அவர்கள், ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பட்ஜெட்டைப் படித்து முடிப்பதற்கு முன்பாகவே, ``மிகச்சிறந்த பட்ஜெட்” என்று சொல்கிறார். முரட்டு பக்தர்களைக் கேள்விப்பட்டிருப்பீர்கள்; முரட்டு அடிமைகளைப் பார்த்திருக்கிறீர்களா? பா.ஜ.க.-வின் முரட்டு அடிமையாக இன்று எடப்பாடி பழனிசாமி அவர்கள் செயல்படுகிறார்.

பழைய அடிமைகள், புதிய அடிமைகள் என்று எத்தனை அடிமைகள் வந்தாலும் நிச்சயம் இந்தச் சட்டமன்றத் தேர்தலில் குறைந்தது 200 தொகுதிகளில் நம் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்று, நம் தலைவர் அவர்கள் மீண்டும் முதலமைச்சராக அமரப்போவது உறுதி. அதற்கான தொடக்கமாக, இந்தத் தஞ்சை மாவட்டம், நிச்சயமாக இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. கழகம் ஏழாவது முறையாக ஆட்சி அமைக்க வேண்டுமென்றால், நம் தலைவர் அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சர் நாற்காலியில் அமர வேண்டுமென்றால், அடுத்த இரண்டு மாதங்களுக்கு நம் கழக நிர்வாகிகள் களத்தில் இறங்கி, கடுமையாக உழைக்க வேண்டும்.

இந்த நேரத்தில் மணமக்களுக்கு ஒரு சிறிய கோரிக்கை. இல்வாழ்வில் நீங்கள் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு வாழ வேண்டும். சுயமரியாதையோடும், பகுத்தறிவோடும் உங்களின் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள். விட்டுக்கொடுக்க வேண்டிய விஷயங்களுக்கு விட்டுக்கொடுங்கள். ஆனால், உரிமையைப் பெறுவதற்கு உறுதியோடு இருந்து உரிமையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.உங்களுக்குப் பிறக்கின்ற குழந்தை ஆண் குழந்தையாக இருந்தாலும் சரி, பெண் குழந்தையாக இருந்தாலும் சரி, அழகான தமிழ்ப் பெயரைச் சூட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் திருமண விழாவில் பங்கேற்கின்ற வாய்ப்பை அளித்த அண்ணன் பழனிமாணிக்கம் அவர்களுக்கும், அவரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும், மாவட்டக் கழக நிர்வாகத்திற்கும் மீண்டும் நன்றி தெரிவித்து, உங்கள் அனைவரின் சார்பாகவும் மணமக்கள் வாழ்க, வாழ்க, வாழ்க என்று வாழ்த்தி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்திப் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் ராஜகண்ணப்பன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கோவி. செழியன், ரகுபதி, மெய்யநாதன்; தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான துரை சந்திரசேகரன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டி.கே.ரங்கராஜன், சி.பி.எம். மாவட்டக் கழகச் செயலாளர் சின்னபாண்டியன், திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் அன்புராஜ், பழ.நெடுமாறன்,

மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர்கள் பூண்டி கலைவாணன், சாக்கோட்டை அன்பழகன், பழனிவேல், கழக இளைஞர் அணி துணைச் செயலாளரும் தாட்கோ தலைவருமான இளையராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.கல்யாணசுந்தரம், ச.முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், முத்துராஜா, சின்னதுரை, முன்னாள் அமைச்சர் வைத்திலிங்கம், மாநகரச் செயலாளரும் மேயருமான சண்.ராமநாதன், ராஜேந்திரன், கலிமேடு செல்வம், எம்.ஆர்.கே.டி. மகேஷ் கிருஷ்ணசாமி, உதயம் சண்முகம், ராமலிங்கம், மாநில நிர்வாகிகள் இறைவன், ஜித்து, துணை மேயர் அஞ்சுகம் பூபதி, அழகு சண்முகராஜா, ஏ.வ.வெ. கம்பன், அக்ரி கணேசன், மாவட்டக் கழக நிர்வாகிகள் எல்.ஜி. அண்ணா, புண்ணியமூர்த்தி, மணிமாறன், கனகவள்ளி பாலாஜி, பகுதி கழகச் செயலாளர் மேத்தா, ஒன்றியச் செயலாளர் செல்வகுமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் முகில் வேந்தன், மாநகர அமைப்பாளர் வாசிம் ராஜா உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.